ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.06.28 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 ஏப்பிறல்

### பொதுநோக்கு

நடைமுறைக் கணக்கில் கலப்பான செயலாற்றமொன்று எடுத்துக்காட்டப்பட்டமைக்கிடையிலும், சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கு தொடர்ச்சியாக ஏற்பட்ட உட்பாய்ச்சல்களின் காரணமாக 2018 ஏப்பிறலில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை வலுப்பெற்றது. நிதியியல் கணக்கிற்கான உயர்ந்த உட்பாய்ச்சல்கள், குறிப்பாக 12ஆவது நாட்டிற்கான பன்னாட்டு முறியின் வழங்கலின் பெறுகைகள் செயற்றிட்டக் கடன்கள் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவிற்கான கடன்கள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தையில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் என்பன மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 இறுதியில் ஐ.அ.டொலர் 9.9 பில்லியன் கொண்ட வரலாற்றிலே மிக உயர்ந்த மட்டமொன்றினை அடைவதற்கு வழிவகுத்தன. இறக்குமதிச் செலவினங்கள் உயர்ந்த வேகத்தில் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி வருவாய்கள் தொடர்ந்தும் குறைவடைந்தமையின் காரணமாக நடைமுறைக்கணக்கு நியதிகளில், வர்த்தகப் பற்றாக்குறை 2018 ஏப்பிறலில் விரிவடைந்தது. எனினும், சுற்றுலாப் பயணிகளின் வருவாய்களும் தொழிலாளர் பணவனுப்பல்களும் இம்மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் ஆரோக்கியமான வளர்ச்சியொன்றினைக் கொண்டிருந்தன.

### அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ. மில் | ஏப்பிறல் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - ஏப்பிறல் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 795 | 795 | 0.0 | 3,569 | 3,784 | 6.0 |
| இறக்குமதிகள் | 1,604 | 1,794 | 11.8 | 6,883 | 7,765 | 12.8 |
| வர்த்தக மீதி (தேறிய) | -809 | -999 | | -3,314 | -3,981 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 297 (ஆ) | 335 (இ) | 12.6 | 1,419 (ஆ) | 1,647 (இ) | 16.1 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 488(ஈ) | 541 | 10.9 | 2,399 (ஈ) | 2,520 | 5.0 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 71 | 28 | | 156 | 47 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 166 | 2,692 | | 803 | 3,476 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 103 | 122 | | 385 | 480 | |
| நீண்ட காலக் கடன்கள் | 63 | 70 | | 418 | 496 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறி | - | 2,500 | | - | 2,500 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | - | - | | 193 | 492 | |
| திரண்ட நிலுவை | | | | -344 | 2,036 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.

(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை முன்னைய மாதத்தில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக 2018 ஏப்பிறலில் விரிவடைந்தது. இவ்விரிவாக்கத்திற்கு இறக்குமதிச் செலவினங்களில் அதிகரிப்பு ஏற்பட்ட வேளையில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் மந்தநிலையில் காணப்பட்டமையே பெருமளவிற்கு தூண்டுதலாக அமைந்தது. 2018இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையும் விரிவடைந்தது.

**வரைபடம் 1: மாதாந்த வர்த்தக நிலுவை**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்**

2018 ஏப்பிறலில், வணிகப் பொருள் ஏற்றுமதி வருவாய்கள் 2017 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 795 மில்லியன்களில் தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டிய வேளையில் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் தேங்காயுடன் தொடர்பான உற்பத்திகள், காய்கறிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பழவர்க்கங்கள் மற்றும் விதைத் தயாரிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் தூண்டுதல் காரணமாக உணவு, குடிபானம் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் உயர்வடைந்தன. பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு நீர்க்கல மற்றும் வான் எரிபொருட்களில் ஏற்பட்ட உயர்ந்த விலைகளும் அளவில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பும் காரணங்களாக அமைந்தன. இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் அதிகரித்தமைக்கு டயர் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களே காரணமாகும். மாறாக, புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 யூனிற்குப் பின்னர் முதற்தடவையாக வீழ்ச்சியடைந்தன. குறிப்பாக 2018 ஏப்பிறலில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகள் 2017 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்த வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டின. மேலும், போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் 2018 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தமைக்கு சரக்குக்கப்பலொன்றின் ஏற்றுமதி பதிவுசெய்யப்பட்ட 2017 ஏப்பறலின் தளத்தாக்கமே முக்கிய காரணமாகும். வாசனைத் திரவியங்கள், சிறு வேளாண்மை உற்பத்திகள் மற்றும் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் என்பனவற்றின் குறைவடைந்த செயலாற்றமே வேளாண்மை ஏற்றுமதிகளின் சுருக்கத்திற்குப் பங்களித்தது. கடலுணவின் அனைத்துத் துணை வகைகளினதும் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்த வேளையில் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிறிதளவால் அதிகரித்தமைக்கு சராசரி ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்த போதும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு உயர்வாக விளங்கியமையே காரணமாகும். 2018 ஏப்பிறலில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 49 சதவீதத்திற்கு வகைகூறின.

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து வருவாய்கள்(அ)

| வகை | ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ. மில் | ஏப்பிறல் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ. மில் | சன - ஏப்பிறல் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **594.9** | **601.3** | **1.1** | **2,701.5** | **2,923.3** | **8.2** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 24.9 | 33.5 | 34.5 | 101.4 | 155.0 | 52.9 |
| விலங்குத்தீன் | 5.9 | 12.1 | 105.6 | 28.7 | 38.2 | 33.3 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 350.5 | 338.6 | (3.4) | 1,626.3 | 1,667.2 | 2.5 |
| இதில் ஆடைகள் | 330.7 | 316.9 | (4.2) | 1,531.7 | 1,563.5 | 2.1 |
| புடவைகள் | 13.5 | 14.8 | 9.8 | 69.0 | 73.0 | 5.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 6.3 | 6.8 | 7.9 | 25.6 | 30.7 | 19.8 |
| இறப்பர் உற்பத்திகள் | 48.9 | 55.3 | 13.1 | 248.4 | 280.5 | 12.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 16.4 | 17.4 | 5.9 | 80.9 | 106.7 | 31.8 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 24.6 | 30.0 | 21.7 | 126.5 | 138.8 | 9.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 27.4 | 6.0 | (78.3) | 66.3 | 34.6 | (47.9) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 29.5 | 37.7 | 27.8 | 120.1 | 173.2 | 44.2 |
| இரசாயன உற்பத்திகள் | 11.2 | 11.2 | (0.1) | 47.1 | 52.2 | 11.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.0 | 10.0 | 0.1 | 45.3 | 47.4 | 4.6 |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 2.7 | 0.4 | (87.0) | 12.7 | 5.2 | (59.0) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 8.3 | 10.8 | 29.0 | 49.2 | 52.4 | 6.5 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.1 | 5.6 | (8.1) | 23.5 | 26.1 | 11.1 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 7.7 | 11.0 | 42.6 | 35.3 | 47.4 | 34.4 |
| இரசாயன உற்பத்திகள் | 2.3 | 1.6 | (31.5) | 10.5 | 9.3 | (11.0) |
| ஏனையவை | 18.1 | 20.3 | 11.6 | 79.2 | 89.0 | 12.3 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **195.8** | **190.3** | **(2.8)** | **851.7** | **843.4** | **(1.0)** |
| தேயிலை | 109.1 | 109.6 | 0.5 | 458.2 | 478.1 | 4.3 |
| இறப்பர் | 2.6 | 2.3 | (9.4) | 19.0 | 14.1 | (25.6) |
| தேங்காய் | 24.8 | 22.6 | (8.5) | 115.7 | 100.9 | (12.8) |
| வாசனைத்திரவியம் | 23.2 | 17.8 | (23.5) | 109.2 | 96.0 | (12.1) |
| மரக்கறிகள் | 2.7 | 2.3 | (14.7) | 9.6 | 8.7 | (9.4) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.5 | 2.3 | (6.2) | 10.4 | 11.3 | 8.0 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 12.7 | 10.5 | (17.7) | 45.3 | 41.0 | (9.7) |
| கடலுணவு | 18.3 | 22.8 | 24.9 | 84.2 | 93.2 | 10.7 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.0** | **3.4** | **(13.7)** | **15.8** | **17.1** | **7.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **794.7** | **795.1** | **0.0** | **3,569.0** | **3,783.7** | **6.0** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்**

2018 ஏப்பிறலில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,794 மில்லியனுக்கு அதிகரித்து இரட்டை இலக்கத்திலான ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு அனைத்து முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு ஆதரவாக அமைந்தது. நுகர்வுப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தனிநபருக்கான ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் இறக்குமதியின் பொதுவான வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தமைக்கு சிறிய எந்திர இயலளவினைக் கொண்ட ஊர்திகள் கலப்பு வலு மற்றும் மின்னியல் வலு ஊர்திகள் என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட கணிசமமான அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் 2017 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்து காணப்பட்ட போதும் கடந்த பத்து மாதகாலப்பகுதியில் மிகக்குறைந்த பெறுமதியினையே பதிவுசெய்திருக்கிறது. இடைநிலைப் பொருட்களின் கீழ், 2018 ஏப்பிறலில் தங்க இறக்குமதிகள் தொடர்ந்தும் அதிகரித்தன. (ஆண்டிற்கு ஆண்டு) தங்க இறக்குமதிகளில் காணப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 2018 ஏப்பிறல் 18 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 15 சதவீத சுங்கத்தீர்வையொன்றினை அரசாங்கம் விதித்தது. இதன்படி, தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் இவ்வாண்டின் இனிவரும் மாதங்களில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2018 ஏப்பிறலில் அடிப்படை உலோகங்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு இரும்பு, உருக்கு மற்றும் அலுமினியப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும். பிளாத்திக்குப் பொருட்கள் மற்றும் வளமாக்கியின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பும் இடைநிலைப் பொருட்களின் வளர்ச்சிக்கு கணிசமமாகப் பங்களித்தன. எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் சிறிதளவால் அதிகரித்தமைக்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் உயர்ந்த இறக்குமதிகள் காரணமாக அமைந்த வேளையில் மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான செலவினம் கணிசமமாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் மீதான செலவினம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2018 ஏப்பிறலில் துணிகளின் இறக்குமதி குறைவடைந்தமை தூண்டுதலாக அமைந்தது. பொறிகள் மற்றும் கருவிகள் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்த வேளையில் போக்குவரத்துக் கருவிகளில் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்கு பேருந்துகள் மற்றும் உழுபொறிகள் போன்ற வாத்தக ரீதியான ஊர்திகளே தூண்டுதலாக விளங்கின. அதேவேளை, சிமெந்து இறக்குமதிகள் இம்மாத காலப்பகுதியில் கட்டடப் பொருட்களின் வீழ்ச்சிக்குப் பங்களித்தன. 2018 ஏப்பிறலில் இந்தியா, சீனா, யப்பான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சிங்கப்பூர் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ. மில் | ஏப்பிறல் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ.மில் | சன - ஏப்பிறல் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **345.1** | **419.6** | **21.6** | **1,515.6** | **1,780.0** | **17.4** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 123.9 | 126.4 | 2.0 | 629.2 | 652.7 | 3.7 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 11.2 | 15.9 | 42.9 | 114.6 | 105.5 | (7.9) |
| இதில் அரிசி | 10.5 | 14.2 | 35.9 | 110.7 | 98.8 | (10.7) |
| கடலுணவு | 14.2 | 18.2 | 28.5 | 68.7 | 76.8 | 11.8 |
| பால் உற்பத்திகள் | 25.6 | 22.1 | (13.6) | 110.4 | 115.3 | 4.4 |
| மரக்கறிகள் | 22.8 | 20.6 | (9.5) | 124.3 | 119.1 | (4.2) |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 22.8 | 17.0 | (25.5) | 86.6 | 105.1 | 21.4 |
| வாசனைத் திரவியங்கள் | 5.6 | 7.8 | 40.6 | 33.0 | 33.2 | 0.7 |
| குடிபானங்கள் | 6.1 | 7.8 | 27.6 | 25.7 | 24.1 | (6.4) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 15.8 | 17.0 | 7.5 | 65.8 | 73.5 | 11.7 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 221.2 | 293.2 | 32.6 | 886.5 | 1,127.4 | 27.2 |
| ஊர்திகள் | 56.3 | 157.8 | 180.2 | 248.2 | 516.6 | 108.2 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 36.6 | 38.7 | 5.9 | 161.8 | 168.7 | 4.3 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 12.5 | 24.0 | 92.4 | 92.3 | 97.0 | 5.1 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 56.7 | 19.3 | (66.0) | 143.5 | 116.1 | (19.0) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 21.1 | 19.1 | (9.8) | 92.4 | 87.3 | (5.5) |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடங்கள் | 16.9 | 12.6 | (25.1) | 54.0 | 57.2 | 5.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 5.8 | 6.9 | 17.5 | 30.8 | 29.8 | (3.4) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 15.3 | 14.9 | (2.6) | 63.4 | 54.6 | (14.0) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **885.7** | **978.4** | **10.5** | **3,692.2** | **4,329.8** | **17.3** |
| எரிபொருள் | 325.6 | 326.8 | 0.4 | 1,208.3 | 1,402.0 | 16.0 |
| இதில் மசகெண்ணெய் | 81.5 | 50.4 | (38.2) | 207.6 | 203.8 | (1.9) |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 204.6 | 257.0 | 25.6 | 829.9 | 1,054.0 | 27.0 |
| நிலக்கரி | 39.5 | 19.4 | (50.8) | 170.8 | 144.2 | (15.5) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 49.6 | 98.9 | 99.5 | 224.6 | 474.0 | 111.0 |
| இதில் தங்கம் | 41.6 | 92.0 | 121.0 | 193.1 | 437.3 | 126.5 |
| அடிப்படை உலோகங்கள் | 39.9 | 53.5 | 34.1 | 192.6 | 188.9 | (1.9) |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 193.9 | 191.6 | (1.2) | 860.6 | 882.7 | 2.6 |
| இரசாயண உற்பத்திகள் | 63.5 | 71.1 | 12.0 | 274.2 | 291.4 | 6.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 48.0 | 60.2 | 25.5 | 201.8 | 238.0 | 17.9 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 30.7 | 36.9 | 20.1 | 137.1 | 159.6 | 16.3 |
| கோதுமை மற்றும் சோளம் | 35.2 | 23.0 | (34.5) | 117.8 | 130.2 | 10.6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வளமாக்கி | 2.8 | 13.8 | 397.1 | 22.6 | 88.5 | 291.0 |
| கனிம உற்பத்திகள் | 9.3 | 7.7 | (16.8) | 54.5 | 59.7 | 9.5 |
| ஏனையவை | 87.3 | 94.9 | 8.7 | 398.0 | 414.9 | 4.2 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **372.5** | **394.7** | **6.0** | **1,614.6** | **1,590.7** | **(1.5)** |
| பொறி மற்றும் கருவிகள் | 185.7 | 215.6 | 16.1 | 871.9 | 866.9 | (0.6) |
| கட்டடப் பொருட்கள் | 134.3 | 121.3 | (9.7) | 524.1 | 499.7 | (4.7) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 51.6 | 57.5 | 11.4 | 215.1 | 221.4 | 2.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.9 | 0.3 | (65.1) | 3.4 | 2.7 | (20.8) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.6** | **0.9** | **48.1** | **60.9** | **64.1** | **5.3** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,603.9** | **1,793.6** | **11.8** | **6,883.3** | **7,764.6** | **12.8** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**

2018 ஏப்பிறலில் இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சி 2017 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 12.6 சதவீதங்கொண்ட அதிகரிப்பொன்றினை தோற்றுவித்தது. 2018இன் முதல் நான்குமாத காலப்பகுதியில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 888,353இற்கு 16.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. 2018 ஏப்பிறலில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 335 மில்லியன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2018 முதல் நான்குமாத காலப்பகுதியில் ஒன்று சேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,647 மில்லியன்களாக விளங்கின. அதேவேளை, முன்னைய மாதத்தில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தின் தொடர்ச்சியாக தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 541 மில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. இதன்விளைவாக, 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் நான்கு மாதகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 2,520 மில்லியனுக்கு 5.0 சதவீதத்தினால் அதிகரித்தன.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2018 ஏப்பிறலில் இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தையில் வெளிநாட்டுச் செலவாணிப் பாய்ச்சல்கள் உள்ளிட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 28.4 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது. 2018இன் முதல் நான்கு மாதகாலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 47.2 மில்லியன்களாக விளங்கின. அதேவேளை, திறைசேரி உண்டியல் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல், திறைசேரி உண்டியல் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சலை விஞ்சியதன் விளைவாக 2018 ஏப்பிறலில் அரச பிணைங்கள் சந்தைக்கு ஐ.அ.டொலர் 13.6 மில்லியன் கொண்ட ஒட்டுமொத்த தேறிய உட்பாய்ச்சலொன்று தோற்றுவிக்கப்பட்டது. மேலும், 2018 ஏப்பிறலில் அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள் ஐ.அ.டொலர் 30.1 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்களினது பெறுகைகள் காரணமாக, 2018 ஏப்பிறல் இறுதியில் நாட்டின் மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 9.9 பில்லியனுக்கு அதிகரித்து 5.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 12.3 பில்லியன் என மதிப்பிடப்பட்டது. இது 6.8 மாத இறக்குமதிகளை உள்ளடக்கப் போதுமானதாகவிருந்தது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

2018 யூன் 28 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 3.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா இக்காலப்பகுதியில் கனடியன் டொலர், அவுஸ்ரேலியன் டொலர், இந்திய ரூபா தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தது. ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா பலவீனமடைந்தமையானது உலகளாவிய ரீதியில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையொன்றில் பலமடைந்து வருவதனை பகுதியளவில் பிரதிபலிப்பதாகவிருக்கின்றது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 யூன் 28 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -3.7% |
| யூரோ | -13.5% | -0.6% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -1.2% |
| யப்பானிய யென் | -5.1% | -5.9% |
| கனேடியன் டொலர் | -8.6% | +2.2% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | +2.1% |
| இந்தியன் ரூபா | -7.5% | +3.2% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி